# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

************

மனு எண்: 027/2017/பே

ஆணை எண்: 0004/2017

நாள்: 10/01/2017

வி. நாகராஜன்,
(செயல் அலுவலர்கள் மற்றும்
ஓவர்சியர்கள், பேரூராட்சிகள்,
தூத்துக்குடி, கன்னியாகுமரி,
தஞ்சாவூர், கடலூர் மற்றும் கரூர் மாவட்டங்கள் சார்பாக) – மனுதாரர்

டெல்லி பாபு,
பிரிவு அலுவலர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
சென்னை,
மற்றும் பலர். – எதிர் மனுதாரர்கள்

## ஆணை

தூத்துக்குடி, கன்னியாகுமரி, தஞ்சாவூர், கடலூர் மற்றும் கரூர் மாவட்ட பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் மற்றும் ஓவர்சியர்கள் சார்பாக திரு. வி. நாகராஜன் என்பவர், தனது 3.1.2017 நாளிட்ட கடிதத்தில் பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களை முறைபடுத்தி, மாறுதல் செய்யப்பட்டதிலும், ஓவர்சியர்களாக பதவி உயர்வு வழங்கி மாறுதல் செய்யப்பட்டதிலும் பெரும் ஊழல் நடந்துள்ளது என்றும், அதற்கு முழு பொறுப்பு பேரூராட்சிகளின் இயக்குநரகத்தில் பணிபுரியும் திரு. டில்லிபாபு, பிரிவு அலுவலர் ஆவார் எனப் புகார் தெரிவித்து, அவர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரியுள்ளார்.

மனுதாரர், தனது முறையீட்டு மனுவில், விதிகளின்படி குறிப்பிட்ட படிவத்தில் முறையீடு சமர்ப்பிக்காததோடு, ரூபாய் 10க்கான தபால்வில்லை (court fee stamp) ஒட்டப்படவில்லை. மனுதாரரின் முகவரியும் தெரிவிக்கப்படவில்லை. பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் பணியாளர்கள் மீது புகார் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள அலுவலர்கள் 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (11)ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள "பொதுப் பணியாளர்" என்ற வரையறைக்குள் உட்பட்டவர்கள் அல்ல. எனவே, இம்முறையீட்டு மனு இம்முறைமன்ற விசாரணைக்கு உகந்தது அல்ல எனக்கருதி, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 10-ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை—600 032

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

12/1/2017
செயலாளர்.

11/1/17

பெறுநர்:
பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம்,
சென்னை - 600 108.